DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII code of criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ERODE.

C.C. No. 112/2015

Deposition of witness for P.W. 3

| | | | |
|---|---|---|---|
| Name | : குமார் | Caste | : |
| Father/Husband Name | : பெருமாள் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 11-10-2022

**முதல் விசாரணை**

1) நான் தற்போது சத்தியமங்கலத்தில் குடியிருந்துகொண்டு கான்கிரிட் வேலை பார்த்து வருகிறேன்.

2) சதீஷ்குமார், வினோத்குமார், அலாவுதீன், ராம்கி, விஜய் ஆகியோர்களை எனக்கு தெரியுமா என்றால் ராம்கியை மட்டும் தெரியும். ராம்கி என்பவர் என்னுடன் பள்ளியில் படித்தவர். சிங்கம்பேட்டை அரசு பள்ளியில் நானும் அவரும் 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை படித்தோம். 2013 ல் பவானி பேருந்து நிலையத்தில் என்னை பார்த்தேன். அவர் பெரிய தொழில் செய்துவருவதாகவும் Income Tax பிரச்சனை வரக்கூடாது என்பதற்காக என்னுடைய ATM ஐ கேட்டார். என்னுடைய ஸ்டேட் பேங்க் ATM யையும் எனது நண்பர் வஜ்ரவேலின் ATM யையும் ராம்கியிடம் கொடுத்தேன். அவர் ஒருவாரத்தில் திருப்பி தருவதாக கூறினார். ஆனால் திருப்பி தரவில்லை. தொடர்புகொண்டபோது செல் ஸ்விட்ஸ் ஆப் ஆகியிருந்தது.

3) 15 நாட்கள் கழித்து கருங்கல்பாளையத்திலிருந்து என்னை அழைத்தனர். அங்கு சென்று கேட்டபோது தான் ராம்கி என்னை போல் பல நபர்களிடம் ATM கார்டை பெற்று

ஏமாற்றியிருந்தது தெரியவந்தது. எனக்கு ATM கார்டிற்கு ரூ. 200/- கொடுப்பதாக கூறினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜராகியிருந்தபோதும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.